# கல்வாரித் தொனி

2008

## VOICE OF CALVARY

தொனி: 3. இதழ்: 9.



# நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்

ஆதி. 12:2B

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
வெளியீடு

# கல்வாரித் தொனி

## VOICE OF CALVARY

2008

தை - மாசி

ஆசிரியர் குழு

வெளியீடு:
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| உங்கள் சகோதரனின் உள்ளத்திலிருந்து | 01 |
| சிறப்புச் செய்தி | 02 |
| புத்தாண்டுச் செய்தி | 05 |
| சிங்காரப் பாலனின் மண்ணகப் பிரவேசம் | 07 |
| அவன் வாழ்வதா? | 08 |
| உக்கிராணத்துவம் | 10 |
| காலேப்பின் வெற்றிக்குப் பின்னால் | 12 |
| என் வாழ்க்கைப் பாதையில் (தொடர்) | 13 |
| மகிமையின் இராஜா | 16 |
| இயேசுவிடம் வாராயோ | 18 |
| வேதனையுடன் கிறிஸ்துவின் சாதனையாளர்கள் | 19 |
| தடைகளை நீக்குங்கள் (வாலிபர் பகுதி) | 21 |
| முயன்று பாருங்கள் | 22 |
| அற்புத வேளையில் | 24 |
| சிறுவர் பணியில் கர்த்தரின் கரம் | 25 |
| இன்றும் ஜீவிக்கும் இயேசுவின் | 26 |
| நிறந் தீட்டுங்கள் | 27 |
| பணித்தள காட்சிகள். | 28 -30 |

# உங்கள் சகோதரனின் உள்ளத்திலிருந்து......

கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களுக்கு என் உள்ளம் நிறைந்த கிறிஸ்மஸ், புத்தாண்டு நல் வாழ்த்தக்கள். கடந்த ஆண்டின் ஒவ்வொரு நிமிடமும் எங்களை நடத்தின நம்முடைய தேவன் இந்த புதிய ஆண்டிலும் எங்களை நிறைவான நன்மைகளால் ஆசீர்வதித்து நடத்துவாராக.

அன்பான வாசக உள்ளங்களே தவிர்க்க முடியாத சில காரணங்களால் இந்த இதழின் பிரசுரமானது சிறிய காலப் பகுதிக்குத் தடைப்பட்டு போனதையிட்டு வருந்துகிறோம். எனினும் இந்த சஞ்சிகையை தொடர்ந்து வெளியிட நமது தேவன் நிச்சயம் உதவி செய்வார். நீங்களும் உங்கள் ஜெபத்தில் இந்த ஊழியத்தை அர்ப்பணிப்புடன் தாங்குங்கள்.

அது மட்டுமன்றி எங்கள் தேசத்தின் சமாதானத்திற்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், தொடர்ந்து உங்கள் ஜெபத்தில் நினைத்து தாங்குங்கள்.

தேவன் நிச்சயமாகவே, உங்களை ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவார். நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.

*ஆசிரியர்: சகோ. கபில்.*

*தேவனின் கிருபை உங்களோடே இருப்பதாக......*

கர்த்தர் நன்மையானதைத் தருவார். சங்கீதம் 85:12.

**சிறப்பு செய்தி**

# உன் ஆசீர்வாதம் உன் தீர்மானத்தில் இருக்கின்றது.

ஆசீர்வாதத்தை விரும்பாதவர்கள் உலகில் யாரும் இல்லை.

நாம் ஆராதிக்கும் கர்த்தர் ஆசீர்வதிக்கின்றவர். சங்.115:13-15 சங். 128:5

முதல் ஆசீர்வாதம் ஆதி 1:28
அவர் எல்லாரையும் ஆசீர்வதிக்கின்றார்.
ஆசீர்வாதத்தை போராடி பெற்றவர்களும் உண்டு. யாக்கோபு ஆதி32:24-29
கர்த்தரின் ஆசீர்வாதம் குறைவற்றது.
மரியாளின் வாழ்விலிருந்து கற்றுக்கொள்ளும் பாடம் லூக்.1:28
உனக்காகவும் ஒரு தேவதூதனை அவர் அனுப்புவார்.
பரலோகில் தேவன் தீர்மானித்த திட்டம்.
கர்த்தர் ஒருவரை ஆசீர்வதிக்க யாரிடமும் அனுமதியோ, அபிப்பிராயமோ கேட்க மாட்டார்.
ஒருவரும் தன்னை கடந்து ஆசீர்வாதம் மற்றவருக்கு பெறுவதை விரும்பமாட்டார்கள்.
தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள தயாராகுங்கள்.

கிருபை பெற்றுக்கொள்ள வேண்டும்.
கிருபை பெற்றவனே Favpred one
வாழ்த்து செய்தியோடு வந்த தேவதூதன்.
தேவனுடைய ஆதரவு தயவு பெற்றவன்.
ஆசீர்வாதம் அவர் எமக்கு காட்டும் தயவு
பலாத்காரமாக அவரிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது.
இரட்சிப்பு கிருபை எபே.2:4,5 மரித்ததால் மட்டும் இரட்சிப்பு இல்லை. அவர் பாவிகளுக்கு காட்டிய அன்பு உயிர்ப்பு இதனால் கிருபையால் இரட்சித்தார்.
இரட்சிப்பு - பரிசு
அவர் கொடுக்கின்றவை அவர் கிருபையால் கிடைக்கிறது.
தகுதியில்லா எமக்கு அவர் கொடுப்பது எல்லாம் கிருபைக்கு அடையாளமே.

2. கர்த்தர் உன்னுடன் இருக்க வேண்டும். லூக்.1:28,30
ஆசீர்வாதத்தின் நாயகன் உன்னோடு இருப்பதால் வேறு எதுவும் அவசியமில்லை.
பரலோகில் ஜெபம் இல்லை கிறிஸ்து அங்கே பதிலாக இருக்கின்றார்.
ஆசீர்வாத ஊற்று 1கொரி.10:4
தேவ மக்களோடு கர்த்தர் சென்றார். அவரில் தாகம் தீர்த்தார்கள்.
கர்த்தர் உன்னோடு இருக்க விரும்புகிறார். மத்.1:23 இம்மானுவேல் - நம்மோடிருப்பவர்.

3. அமைதியாக இருக்க வேண்டும்.
லூக்.1:29 பறைசாற்ற வேண்டாம். கர்த்தர் உன்னிடம் சொன்னதை உனக்குள் வைத்திரு.
மாற்கு 5:41,42 சொல்லக் கூடாது.
மாற்கு 1:44 இயேசுவின் ஊழியத்திற்கு தடையாயிருந்தது.
லூக்.2:19,51 மரியாள் தனக்குள் வைத்து சிந்தனை பண்ணினாள்.
நீதி 3:32ஆ நீதிமான்களோடே
கர்த்தர் உனக்குச் சொன்னதை அது நிறைவேறும் வரை உனக்குள் வைத்திரு. அதனை யாரும் தடை செய்ய முடியாது.

4. நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். லூக். 1:30-38
கணவனை அறியாமல் இருந்தாள். மத்1:24.25 தாம்பத்திய உறவு இல்லாதிருந்தது.
அவமானத்தை சகிக்க வேண்டும். மத்.1:18,19
திருமண நிச்சயம் செய்யப்பட்ட கால எல்லைக்குள் தாம்பத்திய உறவு யூதருக்குள் தடைசெய்யப்பட்டது.
ஆனால் புருஷன் மனைவி என்று அழைப்பார்கள். உபா.22:24
ஆசீர்வாதம் என்ற பரிசு நிபந்தனை என்ற தாளில் சுற்றப்பட்டு வருகின்றது.
பரி.ஆவியானவருக்கு இடம்கொடுக்க வேண்டும்.1:35
பரி.ஆவி பரிசுகளை கொடுக்கிறவர். 1 கனி எபே.5:22,23
2வரங்கள் 1கொரி.12, எபே.4, ரோம.12, சகரியா.4:6

5. பயத்தை அகற்ற வேண்டும். லூக்.1:30 பயப்படாதே.
பயந்தவர்கள் தேவனுக்கு உகந்தவர்கள் அல்லர்.
பயம் கர்த்தரால் வராது 2தீமொ.1:7
எண்.13:20 வேவுகாரார் 12 பேருக்கு சொல்லப்பட்டது.
பயந்தவர்கள் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை.
யுத்தம் செய்ய தைரியமுள்ளவர்கள் மட்டுமே தேசங்களை சுதந்தரித்தனர்.
மனித பயம் நீதி 29:25 மனித பயம் கண்ணி வெடி நிறைந்த பூமியில் நடப்பதற்கு சமன்

6. தனிப்பட்ட அர்ப்பணிப்பு வேண்டும். லூக்.1.38
இதோ நான் ஆண்டவனுக்கு அடிமை
அவர் வார்த்தைக்கு இடம் கொடுக்க வேண்டும். அவர் சித்தத்திற்கு அடிமை
அடிமைக்கு சுதந்திரம் இல்லை.
சுய உரிமை இல்லை.
பாராட்டு இல்லை.
சேவை செய்பவன்
யோவான் 21:18

7. ஆசீர்வாதத்தின் தன்மை
உலகை ஆசீர்வதிக்கிறவளாக மாறினாள் இயேசுவால் உலகம் ஆசீர்வதிக்கப்பட்டது. 1:31-33, 2:10-12
ஆதி.12:3 கூறப்பட்ட உலக ஆசீர்வாதம் மரியாள் மூலம் உலகிற்கு கிடைத்தது.
கர்த்தர் உனக்கு கொடுக்கும் யாவும் சிறந்தவை பெரியவை
உலக இரட்சகரை பெற்றுக் கொடுத்தாள்.

முடிவுரை
கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வாதத்தின் பாத்திரங்களாக மாற்ற விரும்புகிறார். நீங்கள் ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.

தலைமை போதகர்:
**லெஸ்லி மத்தியூஸ்**

**பத்தாண்டு சிறப்பு செய்தி**

# கிறிஸ்துவிற்கு பிரியமான பிள்ளைகளே!

வருடங்கள் பல கடந்து புதியதோர் ஆண்டுக்குள் வந்துள்ளோம். பிறந்துள்ள 2008ஆம் ஆண்டு குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, தேசத்தின் வாழ்வு ஆவிக்குரிய வாழ்வு என்பவற்றில் ஏதாயினும் புதிதான காரியம் நடக்காதா? என்று ஏக்கத்தோடு காத்துநிற்கும் இதயங்களே! இவ் ஆண்டில் தேவன் புதிய காரியங்களை காணச் செய்யப் போகிறார். பவுல் கூறுகிறார். "பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி தொடர்கிறேன்" என்பதாக (பிலி: 3(7-14)

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட பலவிதமான பாடுகள், உபத்திரவங்கள், இழப்புக்கள், உயிராபத்துக்கள், கடன் தொல்லைகள், மனித உதவியின்றி திகைத்து நின்ற அனுபவம், பற்றாக்குறைகள், ஏமாற்றங்கள்............ என்பவற்றால் மனமுடைந்தும் அசுத்தங்களுக்கும் பாவங்களுக்கும் சாபங்களுக்கும் அடிமைப்பட்டு விடுவிப்பார்இன்றி திகைத்தும் நிற்கின்ற உங்களுக்கு இந்தப் புதிய ஆண்டின் வாயிலுக்கு கடக்கும் முன் நான் கூறும் ஒரு நற்செய்தி உன்னை நேசிக்கவும் உன்னை விடுவிக்கவும் உனக்கு ஒருவர் இருக்கிறார். அவர் தான் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து. அவருடைய இரத்தத்தால் நீ விடுதலை பெற்றுக் கொள்ள வேண்டும். 1 யோவான் 1:7 (இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்)

ஆகவே 2007ம் ஆண்டின் அனைத்து அனுபவங்ளையும் மறந்து புதிய இந்த 2008ம் ஆண்டில் கிறிஸ்துவோடு கூட நீ நடக்க ஆரம்பித்து விடு "இதோ நான் புதிய காரியங்களைச் செய்கிறேன்" என்று தேவன் உனக்குச் சொல்கிறார்.

இவ்வாண்டில் நமக்கு முன்பாக உள்ள 365 நாட்களிலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுப்போம்.

புதிய கிருபை, புதிய பெலன், புதிய அபிஷேகத்துடன் இந்த புதிய ஆண்டில் உங்களை நடத்த போகிறார். எரே. 3:(22-28) இன் பிரகாரம் புது கிருபையுடனும் ஏசா. (40 - (27 - 31) இன் பிரகாரம் அவருக்கு காத்திருப்போர் இந்த ஆண்டில் புதிய பெலனையும், புதிய அபிஷேகத்தையும் பெறப்போகிறார்கள். கர்த்தர் இந்த ஆண்டில் நமக்காக வைத்துள்ள புதிய நன்மைகள் நமமைச் சூழ்ந்து கொள்ளும்.

அன்பின் சகோதர, சகோதரியே, தாயே, தகப்பனே இதை வாசிக்கின்ற நீ சிவேளை ஒரு ஏமாற்றப்பட்ட சூழ்நிலையில் இருக்கக் கூடும். ஆனால் உன் வாழ்வில் ஒர் புதிய காரியத்தை செய்ய கர்த்தராகிய தேவன் விரும்புகிறார். உன் இருதய பூர்வமான அர்ப்பணிப்புக்கு நீ கடந்து வருவாயா? அர்ப்பணிப்பாயானால் இந்த நிமிடத்தில் தானே உன் வாழ்வில் சரீரசுகம், ஆத்தும விடுதலை, ஆவியின் புதுபெலனை அளித்து இவ்வாண்டில் மிகவும் மனமகிழ்ச்சியில் நடத்த தேவன் சித்தமாயிருக்கிறார். புதிய ஆண்டில் நீ தேவனோடு நடந்து அவரின் சித்தத்தை நிறைவேற்றலாம். "உன் வாழ்க்கையை அவர் செழிக்கச் செய்வார்."

ஆமென்.

V. கனகராசா
(நிறைவேற்றுப் போதகர்)
யாழ்ப்பாணம்.

# சிங்காரப்பாலனின் மண்ணக பிரவேசம்

காரிருளில் கானகப்பாதை - அது
பூமியில் மானிடர் தம் வாழ்க்கை
கண்கண்ட இடமெல்லாம்
குருதி கொட்டிய அகோரம்
கேட்கும் இடமெல்லாம் - மனித
அழுகுரலின் அவலம்
ஒட்டுமொத்த கோரங்களும் - ஓங்கிநின்று
மனித குலத்தை அமிழ்த்திய கணத்தில்
ஆறுதலளிக்க அன்புள்ளம் எங்கே?
மீட்டெடுக்க மீட்பர் எங்கே?
கலங்கி நிற்கும் நெஞ்சத்திற்கு
பொன்னான சேதி இது!
வானதூதரின் ஆரவாரம் தொனிக்கிறதே!
விண்மீன்களுக்குள்ளே ஏதோ ஒரு சலசலப்பு
சூரிய சந்திரரே உம் களிப்புக்கு காரணம் என்ன?
ஓ..... மன்னவன் இயேசு
வானம் விட்டு பூமி வந்தாரோ!
வண்ண முகிலோடு தள்ளி விளையாடிய - பாலகா
பாவம் தோய்ந்தமண் தன்முகத்தை மறைத்துக் கொண்டதோ
மண்ணலகிற்கும் விண்ணுலகிற்கும் திறவு கோலுடையவரே
மாட்டுத் தொழுவம் தான் உமக்கு மாளிகையானதோ!
மன்னவா நீர் பிறக்க உலகம் இடந்தரவில்லையா?
எம்மவர் இதயம் உள்ளத்துள் பிறந்தருள்வாய் என்று
வாழ்ந்தருள்வாய் என்றும் வாழவைப்பாய் எம்மை.

சகோதரி சோபிகா

சிறுவர் விருந்து

# அவன் வாழ்வதா?

வெண்ணிலா வெளிச்சம் விண்மீதிருப்பினும், எண்ணெய் விளக்கினை ஏற்றித் தங்கி மங்கி எரிகின்ற ஒளி விளக்கின் வெளிச்சத்திலே, தனிமையிலே மிகவும் பயபக்தியோடு தன்னையே நினைத்து அல்லும் பகலும் அயராது வேண்டிடும் பக்தன் ராமுவை உற்று நோக்கினார். கடவுள்.

பெருங்குளத்திலே வீழ்ந்து இஷ்டப்படி நீந்தும் மாந்தர் இவ்வுலகத்திலே பலர் இருக்க பாவத்தை தேனாய் பருகிடும் மானிடர் மத்தியில் இப்படியும் ஒரு பக்தனா? வியந்தார் கடவுள். நாளாந்தக் கடமை நாள்தோறும் காத்திருக்க ராமு என் வரவிற்காகக் காத்திருக்கும் காரணத்தை கேட்டறிவோம் எனநினைத்தார் கடவுள்.

எனவே ஒரு நாள் அந்தி சாயும் அந்த இனிய மாலைப் பொழுதினிலே ராமுவை அண்டி வந்தார் கடவுள். பக்தா ராமு! காலை தொடங்கி மாலைவரை நித்தம் நித்தம் என்னை நீ நினைப்பதன் காரணம் யாதோ? என்னையே உன் நினைவாகக் கொண்டிருக்கும் உன் நிலை கண்டேன். உன் குறையென்ன கேள் அது இன்றே உனக்குக் கொடுக்கப்படும் என்றார்.

ஆச்சரியம் அடைந்தான் ராமு. சற்றும் சிந்திக்காதவனாய் கடவுளே! நீர் தான் அந்தக் கடவுளானால் எனக்கு நீர் ஓர் வரம் தரவேண்டும் என்றான்.

கடவுளும் ராமுவைப் பார்த்து பக்தா! உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் வாஞ்சையின் படியே இதோ உனக்கு நான் வரம் தருகின்றேன். நீ எதை வாஞ்சித்துக் கேட்கிறாயோ அது எதுவாயினும் உனக்கு நான் வரம் தருகின்றேன். நீ எதை வாஞ்சித்துக் கேட்கிறாயோ அது எதுவாயினும் உனக்கு கொடுக்கப்படும். அதன் இருமடங்கு உன் அயலானுக்கு கொடுக்கப்படும் என்றார்.

எனவே தாமதம் செய்யாமல் கேள் பக்தா! நான் உடனே திரும்பிச் செல்ல வேண்டும் என்றார் கடவுள்.

திகைத்தான் ராமு. நான் தவமிருந்து காத்திருந்து பெற்றுக்கொள்ள என் அயலான் சும்மாயிருந்து இரு மடங்கு பெற்றுக்கொள்வதா? என்னைவிட என் அயலவன் ஆசீர்வதிக்கப்படுவதா? நான் உண்ணாமல் உறங்காமல் என் அயலானை வாழவைப்பதா? நான் ஒரு கார் கேட்டால் என் கண்முன்னால் என் அயலான் இருகார் வைத்திருப்பதா? இது எப்படி? என்னைவிட என் அயலான் அவன் வாழ்வதா? ராமுவின் மனம் அவனைக் கொத்தித்தின்றது. நிலை தடுமாறினான் ராமு. அவனுக்கு தலை சுற்றியது. சிந்தனை மிகமிக வேகமாக சுழர ஆரம்பித்தது.

மறுகணம் ராமு கடவுளை நோக்கி கடவுளே! என் ஒரு கண் குருடாகட்டும் என்றான். திகைத்தார் கடவுள் நாடி வந்தவர்க்கு நாடளித்து வாடி வந்தவர்க்கு விருந்தளிக்கும் இந்த நாட்டினிலே இப்படியும் ஒரு பக்தனா? மொழிவாழ இனம்வாழ நாடுவாழ மூச்சுவிட்டோர் பலரிருக்க அடுத்தவன் வாழப்பொறுக்காதவன் இவனும் ஒரு பக்தன் தானா? வியந்தார் கடவுள். வரம் கொடுத்து மறைந்தார்.

ஆம் என் அன்புக் குழந்தைகளே! நம்மை நாம் நேசிப்பது போல நாமும் நமது பிறரை நேசிக்க வேண்டும். அவர்களுக்கு தீமையை அல்ல நன்மையை செய்ய வேண்டும். அப்பொழுது நாம் நீடிய ஆயுளுடன் சுகபெலத்துடன் வாழலாம். முன்னேற்றம் இல்லாதவர் வைத்திருக்கும் மூலதனம் பொறாமை. இதனை நம்மைவிட்டு அகற்றுவோம். பிறர் வாழ வழிசெய்வோம். பொறாமையோடு போராடி ஜெயம் கொண்டு பெருமையோடு நிமிர்ந்து நிற்போம். பிறக்கும் புதிய வருடத்தில் புதிய தீர்மானத்தோடு பிறரை நாம் நேசித்து அன்பு காட்டி அவர்களுக்கு நல்வழி காட்டுவோமா?

உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக மத்தேயு 22:39

திருமதி சாந்தி மத்தியூஸ்

# உக்கிராணத்துவம்

நம்மில் ஒவ்வொருவரும் தேவனுக்கு தன்னை தான் குறித்த கணக்கு ஒப்புவிப்பான். உக்கிராணத்துவம் என்றால் கணக்கு ஒப்புவிப்பு என்று அர்த்தப்படும்.

ஆதி. 2 : 7 - 10 லூக்கா. 19 : 12 - 27 ரோமர். 14 : 12.

### 1. சுவிசேஷத்தைப் பற்றிய உக்கிராணத்துவம்

மத்தேயு 28 : 19. நீங்கள் ஒவ்வொருவரும் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளுக்கும் கிறிஸ்துவின் (பாடு, மரணம். உயிர்ப்பு) சுவிஷேசத்தை அறிவித்து சீஷராக்குங்கள் இது கிறிஸ்து தமது அடியாருக்கு வழங்கிய பிரதான ராஜகட்டளை.

**சிந்தனைக்கு:** சுவிஷேசத்தை அறியாதவர்கள் மத்தியிலே போய் விருப்புடன் கூறுகிறோமா?

தேவ பிள்ளையே நீ தன்னை அறிவிப்பாயா என அவர் ஏக்கத்துடன் காத்திருக்கின்றார்

### 2. காலத்தைப் பற்றிய உக்கிராணத்துவம்.

மனுக்குலம் விநாடி, நிமிடங்கள், மணித்தியாலம், நாட்கள், வாரங்கள், மாதங்கள். வருடங்களை ஈவாக தேவ கரத்தில் இருந்து பெரு மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறார்கள். பெற்ற காலத்திற்கு நன்றி கூறுவது "இது கர்த்தர் உண்டு பண்ணின நாள்" காலமானது சுத்த கிருபையாய் அருளப்பட்டுள்ளது.

**சிந்தனைக்கு:** புத்தியில்லாத ஐந்து கன்னியர் தூக்கத்தில் காலத்தை வீணடித்ததில் மணவாளனை வரவேற்க முடியவில்லை.

உன் ஓய்வு நேரங்கள் எப்படிச் செலவாகிறது.

பொழுது போகிறது இல்லை என்கிறாயா?

நாட்கள் பொல்லாதவைகளானபடியால் காலத்தைப் பிரஜோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்

**3. தாலந்துகளின் உக்கிராணத்துவம்.**

ஆண்டவன் பற்பல திறமைகளை, வரங்களை வழங்கியுள்ளார். வித்தியாசமான வரங்களால் எண்ணிக்கைகள் வேறுபடலாம், கொடுக்கப்பட்ட தாலந்துகளை தேவ நாம மகிமைக்காக பொறுப்புணர்ச்சிடன் உபயோகிக்கின்றேனா? அசதியாக இருக்கிறேனா? ஒளித்து வைத்திருக்கிறேனா?

**சிந்தனைக்கு:** தேவனுடைய நாமம் மாத்திரம் மகிமைப்பட உற்சாகமாய்ப் பயன்படுத்துகிறோமா? தாலந்துகளை பாவ ஜீவியத்திலே வீணடிக்கின்றோமா?

**4. விளைபொருள், வருமானம் தருவனவற்றின் மேல் உக்கிராணத்துவம்**

தேவனுடைய கரத்திலே வாங்கி அவருக்குக் கொடுக்கிறோம். 1 நாளாகமம். 29:14. அவர் கரத்தில் பெற்றுக் கொண்டவற்றை அவருக்கே திரும்பக் கொடுக்கிறோம் என்ற உணர்வுடன் செயற்படுவோமாக.

**சிந்தனைக்கு:** என்னுடைய பொருள் என்னுடைய வருமானம் எனக்கு மிஞ்சினது தான் தானம் என்று வீராப்பு பேசித் திரிகிறாயா?

என்னுடைய வருமானம் இவ்வளவுதான் கொடுப்பேன் அல்லது இல்லை என்கிறாயா?

**சகோதரன் குணரட்ணம்**

# காலேப்பின் வெற்றிக்கு பின்னால்

**கர்த்தர் என்னோடு இருப்பாரானால் கர்த்தர் சொன்னபடி அவர்களை துரத்தி விடுவேன் என்றார்.** (யோசுவா 14 : 12)

காலேப்புக்குத் தெரியும் கர்த்தர் என்னோடு இருப்பார் என்றால் நான் வெற்றியை சுதந்தரித்து கொண்டு செல்ல முடியும் என்று.

ஆனால் கர்த்தர் நம்மோடு இருக்க நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு.

பிரியமானவர்களே.

அதைத்தான் நாம் யோவான் 15:7ல் இப்படியாக வாசிக்கின்றோம்.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்து இருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்கு கொடுக்கப்படும்.

இயேசுவில் நாம் நிலைத்து இருக்க வேண்டும் அவர் மீது வைக்கும் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். அப்படியானால் அவரது வார்த்தைகளில் நாம் நிலைத்து இருக்க வேண்டும். இவ் வார்த்தையை நமக்குக் கூறிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவரது பிதாவின் கற்பனையினை கைக்கொண்டு தம் பிதாவில் நிலைத்திருந்தார். இதை நாம் யோவான் 15:10இல் இப்படியாக வாசிக்கிறோம்.

"நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல நீங்களும் என் கற்பனைகளை கைக் கொண்டு இருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்து இருப்பீர்கள்".

ஆம் பிரியமான சகோதரனே கர்த்தர் காலேப்போடு இருந்ததால் அவன் எதிரிகளை துரத்துவது அவனுக்கு இலேசான காரியமாக இருந்தது. அதைப் போலத்தான் இன்றைக்கு இந்த உலகத்தின் பிரச்சினைகளை எப்படி எதிர் கொள்கிறாய். நீ தனிமையில் அதற்கு முகம் கொடுத்தால் நீ துக்கப்பட வேண்டியிருக்கும். நீ அவருடைய வார்த்தையில் நிலைத்து இருந்து அவரோடு இருப்பாயானால் பிரச்சினைகளை மேற் கொள்வது உனக்கு இலகுவானது எனவே,

இயேசுவிலும் அவரின் போதனையிலும் நிலைத்து இருந்து நன்மைகளை சுதந்தரிப்போம்.

**சகோதரன் றெஜி.**

# என் வாழ்க்கைப் பாதையிலே

இப்படியாக காலங்கள் கடக்க எமது மகளும் எங்கள் இருவரிடத்திலும் காணப்பட்ட நல்ல பண்புகள் எவையோ அத்தனையும் நிறைவாய்க் கொண்ட அன்பு மகளாக, தேவ தயவுடன் பலராலும் போற்றப்பட்டவளாக, பாடசாலை வாழ்க்கையிலும் பல சிறப்புக்கள் பெற்றவளாக எம் குடும்பத்திற்கும், சபைக்குமோர் ஆசீர்வாதமான மகளாக நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தாள்.

1981ம் ஆண்டிலே திரு. திருமதி சிந்தியா தேவதாசன் அவர்களிடமிருந்து எனக்கு வேலைக்கு அழைப்புக் கிடைத்தது. ஆகவே, இலங்கை வேதாகம விடுமுறைப் பாடசாலை அமைப்பில் இணைந்து சேவை செய்ய ஆரம்பித்தேன். கர்த்தர் படிப்படியாக எமது பொருளாதார வசதிகளை உயர்த்த ஆரம்பித்தார்.

உமக்கும் உம்முடைய குடும்பத்தாருக்கும், உமக்கு இருக்கிற யாவற்றிலும் வறுமை வராதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன். ஆதி. 45:11 என்ற தேவனுடைய வார்த்தை எமது வாழ்க்கையில் கிரியை செய்ய ஆரம்பித்தது. என் நேசர் ஒருவருக்கே சகல துதியும் உண்டாகட்டும்.

இப்படியாக அங்கு சேவை செய்யும் நாட்களில் கணவனும் மனைவியும் (சிந்தியா - தேவதாசன் இவர்கள் எப்பொழுதும் இணைந்து சேவை செய்வதைப் பார்க்கும் பொழுதெல்லாம் நாம் இருவரும் இணைந்து ஒரே ஊழிய ஸ்தலத்தில் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை உள்ளத்தில் கொழுந்துவிட்டெரியும். ஆயினும் கர்த்தர் மனமிரங்கி தந்த சேவையில் உண்மையாய் உழைத்து வந்தேன்.

தரித்திரம் - தரித்திரோம் என்று கூறிக் கொண்டே எம்மை விட்டோடியது. மனமகிழ்வாய் வாழ்ந்த அந்நாட்களில் பலவிதமான புதிய புதிய அநுபவங்களுக்கு முகம் கொடுக்க ஆரம்பித்தோம். அமைதியாய்,

ஆனந்தமாய், மனநிறைவாய் வாழ்ந்து வந்த எமது கூடு கலைக்கப்பட்ட வேதனையான வேளையது. எனது கணவரின் அன்புத் தாயாரும், தகப்பனும் ஒருவர் பின் ஒருவராக கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர். கணவனின் சகோதரனும், சகோதரியும் திருமணமாகி எம்மை விட்டு கடந்து சென்றனர். மூளைக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட எனது மூத்த சகோதரியின் 5 வயதுடைய ஒரே மகளை மரணத்தில் பறி கொடுத்தோம். இந்த வேளையில் எனது சகோதரிக்கு ஆறுதலாக எமது 5 வயது மகளை சில நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் விட்டு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இங்கே ஒரு காரியத்தை நான் உங்களுக்கு சொல்கிறேன். 1983ம் அண்டு ஜனவரி மாதம் ஏலிம் சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரான சகோதரி அனாலார்சன் அவர்கள் கொழும்பில் எமது வீட்டிற்கு வந்து யாழில் உனக்கு ஊழியம் உண்டு. வா மகனே என்று அழைத்தார்கள். அதற்கு என் கணவன் இலங்கையில் எங்கு வேண்டுமானாலும் ஊழியம் செய்வேன் யாழ்ப்பாணத்திற்கு வரமாட்டேன் என்று கூறி காரணத்தையும் விளக்கினார். (கொழும்பை சேர்ந்த என் கணவனுக்கு யாழ் வந்து மூன்றே நாட்களில் ஒருவித சரும வியாதி ஏற்படும்) ஆனால் அந்தத் தாயாரோ சிரித்துவிட்டு நிதானமாக You will come my son என்று கூறிவிட்டுக் கடந்து சென்றார்கள்.

ஆறு மாதங்கள் வெகு வேகமாக ஓடி மறைந்தன. திடீரென 1983ம் ஆண்டு யூலைக் கலவரம் இலங்கையில் மிகமிகப் பயங்கரமாக வெடித்தது. நாம் இருவரும் அகதிகளாக்கப்பட்டு கொழும்பு தேஸ்ரன் கல்லூரியில் தஞ்சமடைந்தோம். 5000ற்கும் மேற்பட்ட அகதிகளோடு உண்ண உணவின்றி, தலைசாய்க்க இடமின்றி, குளிப்பதற்கு வசதியின்றி நாம் பட்ட வேதனைகள் ஒருபுறம். மறுபுறம் பயம், பலவிதமான வேதனையான சம்பவங்கள், கண்களினால் கண்ட அகோர காட்சிகளிலிருந்து மீள முடியாத நிலை. துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்ட பயங்கர அநுபவம் இவற்றிற்கு மத்தியில் மகள் எம்முடன் இல்லாதது எமக்குப் பேராறுதலைக் கொடுத்தது. கர்த்தர் நல்லவர். அவர் எமக்கு சகாயர். அவரைத் துதித்தோம். எம்முடன் எமது சபையைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். வேளை கிடைக்கும் போதெல்லாம் கூடி

ஜெபித்தோம். பணத்தை பொருட்களை, அன்பானவர்களைப் பறி கொடுத்து வேதனையில் வாடியவர்களுக்கு ஆறுதல் சொன்னோம். மாலை வேளைகளில் குழந்தைகளைக் கூட்டி கதை சொல்லி மகிழ்ந்தோம். பகல் முழுவதும் பல காரியங்கள் எம் கவனத்தில் இருள் சூழ்ந்ததும் தனிமை. அப்பொழுதெல்லாம் எந்தக் கப்பலுக்குப் பெயரைப் பதிவது என்ற பேராட்டம் நமக்குள்ளே. மகளை யாழ்ப்பாணத்தில் விட்டு வந்ததால், யாழ் போக வேண்டும் என்பது என் நோக்கம். யாழ் செல்லும் ஒவ்வொரு தடவையும் என் கணவனின் கைவிரல்களில் அரிப்பு எற்பட்டு நீர் வடியும். இந்த வேதனையை அனுபவிக்க விரும்பாத என் கணவனுக்கு இந்தியா செல்ல வேண்டும் என்ற வாஞ்சை. இந்தப் போராட்டத்தில் 18 நாட்கள் கழிந்தோடின.

தொடரும்

**திருமதி சாந்தி மத்தியூஸ்.**

**எப்படிப் படிக்கிறீர்கள்**

*மிக வேகமாகப் படிப்பவர்கள் நிமிடத்திற்கு 700 வார்த்தைகள் வரையில் படிக்கலாம். மிக மெதுவாகப் படிப்பவர்கள் நிமிடத்திற்கு 240 வார்த்தைகள் மட்டுமே படிக்க முடியும். வேகமாகப் படிப்பவர்களுக்கு நூற்றுக்கு முப்பது பங்கு மட்டுமே மனதிற்குள் பதிவாகிறது. ஆகையால் பரீட்சைக்குப் படிப்பவர்கள் மெதுவாகப் படிப்பதே நல்லது.*

*தேன்கூடு*

# மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பார்

2008ம் ஆண்டிற்குள் பிரவேசிக்கும் உங்கள் முன்பாக புத்தம் புதிய 365 நாட்கள் தேவனால் வைக்கப்பட்டுள்ளது. தேவனது அளவிட முடியாத புதிய கிருபைகளும் அந் நாட்களிலே சூழ்ந்து கொண்டிருக்கின்றன.

புதிய ஆண்டிலுமாக உங்கள் வாழ்க்கை முழுவதும் "மகிமையின் இராஜா" உட்பிரவேசிக்க விரும்புகிறார்.

பூவுலகுக்கு பயனில்லாது போகுமளவு பரலோக சிந்தையா, பரலோகுக்கு பயனில்லாது போகுமளவு பூவுலக சிந்தையா? கர்த்தரின் வருகை சமீபமாயிற்று. அக்கிரமம், மிகுதியாவதினால் அனேகரின் அன்பு தணிந்து போம். (மத். 24:12)

தேவனது நித்திய திட்டம் குடும்பம் ஆகும். அதை சீரழிக்க சத்துரு தன்னாலியன்ற அத்தனையையும் செய்கின்றான். தேவனுடைய பிள்ளைகளே பிசாசின் குறி. அனைத்து ஆயதம் இருந்த போதும் "எந்த சமயத்திலும் ஜெபம் பண்ணி" "விழித்திராவிடில்" நாம் மோசம் போய் விடுவோம். கடைசிக் காலம் பற்றி இயேசு பேசும் போதெல்லாம் ஜெபத்தில் விழித்திருப்பதை வற்புறுத்தினார்.

"அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழிததிருந்து ஜெபம் பண்ணுங்கள்" (மாற்கு 13:33) என்றுமே இல்லாத வேகத்தில் உலகம் சென்று கொண்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளும் அதே வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேகத்தில் தடைபட்டுப் போனது ஜெப நேரமே!

இன்று நம்பிக்கையின்மை, ஒருமனமின்மை, ஏமாற்றுதல், பிரிந்து போதல், மற்றும் உறவுகளின் ஆழத்தில் சுயநலமும்,

தந்திரமும், இப்படியாக உலகம் முழுவதும் அன்பு தணிந்து போன ஒரு காலக்கட்டத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

தேவனுடைய சபையானது ஓர் இராஜ்யம் ஆகும். தனக்குத் தானே விரோதமாக பிரிந்திருந்தால் அந்த இராஜ்யம் நிலை நிற்க மாட்டாதே. சபையானது ஓர் குடும்பமாகும். தனக்குத் தானே விரோதமாக பிரிந்திருந்தால் அந்தக் குடும்பம் நிலைநிற்க மாட்டாது.

"நீங்கள் கவனமாய் நடந்து நாட்கள் பொல்லாதனவைகளானதால் தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். (எபேசியர் 5:15,16,27)

"ஒருவருக்கொருவர் விரோதமாக முறையிடாதிருங்கள். இதோ நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். (யாக்கோபு. 5:9)

உலகம் சபையை நோக்கிக் கொண்டிருக்கிற இந்த காலகட்டங்களில் நாம் பூமிக்கு உப்பு என்பதை மறந்து விட்டோமா?

இந்தப் புதிய ஆண்டில் நாம் உலகத்திற்கு உப்பாகச் செயற்படுவோம். ஒருவரோடு ஒருவர் சமாதானமாக இருப்போம். எமது ஐக்கியம் வெறும் உதட்டளவில் அல்லாது இருதயபூர்வமாக இருக்கட்டும். கரிசனையோடு ஒருவருக்கொருவர் ஜெபியுங்கள். பிறர் பாரத்தைச் சுமந்து கிறிஸ்துவின் அன்பின் பிரமாணத்தை நிறைவேற்றுவோம். ஆன்மீக பொருளாதார ஆசிகளைப் பகிருங்கள். ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக் கொள்ளுவோம். பிறர் குற்றத்தை வெளிப்படுத்தாதிருங்கள். எமது அன்பினால் உலகம் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று அடையாளம் காட்டும்.

**"வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள் அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பார். [சங். 24:9].**

சகோதரி கிறேஸ் யோசேப்

# இயேசுவிடம் வாராயோ!

ஒளி ஒன்று பிறந்ததுவே
வளி ஒன்று பிறந்துவே
ஏழை உருவில் வந்ததுவே
ஏழை துயர் துடைத்ததுவே.

தச்சன் மகன் ஆனதுவே
தரணி துயர் துடைத்துவே
பஞ்சு மெத்தை எதுவுமின்றியே
பிஞ்சு பாலனாய் வந்ததுவே.

பாவிகளை மீட்டதுவே
பாவமறியா செமறியே
இருள் நீங்கும் சுடர்ஒளியே
இதயங்களில் குடி கொள்வதுவே.

இராய னான மைந்தனும்
இயேசு என்னும் பெயராமே
இன்பராம் என்பாற்கு
எனை மீட்க வந்தவர்க்கு
மாடு தங்கு இடம் கூட
மைந்தனுக்கு கொடுக்கவில்லை.

கடுங்குளிரில் நடுநடுங்கி
கொடும் பாவியின் சுமைதனை
தனதாக்கவே அவதரித்து
தன்னுயிரைத் தந்தாரே.

இடையர்கட்கு காட்சி கொடுத்த
இணை இல்லா என் தேவன்
என இன்று நடத்திறாரே
உன்னை நடத்த ஏங்கிறாரே.

என் சோதர சோதரியே
வருவாயா நீ இன்று
என்பான் அன்பை சுவைப்பதற்கு.

ஆக்கம்:

சகோதரி ஜீவமலர் வட்டுக்கோட்டை.

# வேதனையுடன் கிறிஸ்துவின் சாதனையாளர்கள்

இந்திய மொழிகளிலே தமிழ்மொழிதான் பழங்கால இலக்கியங்களை தன்னிடத்தே கொண்ட தனிப்பெருமை வாய்ந்தது. இந்தியாவின் இலக்கிய வரலாற்றில் தமிழ்மொழிக்கு இன்னொரு தனிச் சிறப்பும் மேன்மையும் உண்டு. இந்திய மொழிகளிலே தமிழ்மொழியில் தான் முதன்முதலில் புத்தகம் அச்சிடப்பட்டது. இந்தியாவில் முதன்முதலாக வேதாகம் அச்சிடப்பட்ட தனிப்பெருமை -தமிழ்மொழியின் இரண்டாவது தனிச்சிறப்பு.

சீகன் பால்க் - முதல் **மிஷனறி**

இந்தியாவிற்கு வந்த முதல் புராட்டெஸ்டென்ட் **மிஷனறி** தமிழ் வேதாகமத்தை மொழிபெயர்த்து அச்சிட்டவர் சீகென்பால்க் (1682-1718)

இந்தியாவிற்கு முதல் புராட்டெஸ்டென்ட் **மிஷனறி**யை அனுப்பிட உதவிய முதல் Sponsor டென்மார்க் - நார்வே மன்னர் மேதகு நான்காம் பிரடெரிக் (1671-1730)

தமிழ்மொழியில் வேதாகமம் மொழிபெயர்க்கப்படுவதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் டென்மார்க் தேசத்தின் அரசன் நான்காம் பிரடெரிக். இவருக்கு இந்தியாவின் மேலிருந்த **மிஷனறி** பாரத்தால் எப்படியாவது **மிஷனறி**களை அனுப்ப ஏற்பாடு செய்தார். தன் அரண்மனை பிரசங்கியாராகிய லுட்கென்ஸிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். ஆனால் இந்தியாவிற்கு **மிஷனறி**யாக செல்வதற்கு

டென்மார்கு தேசத்தில் ஒருவரும் முன்வராததால் லுட்கென்ஸ் தன் சொந்த தேசமாகிய ஜெர்மனியின் பக்கம் திரும்பினார். அதன் விளைவாக 23வயது சீசன்பால்க்கும், அவரது நண்பர் 29வயது ப்லுட்சும் இந்தியாவிற்கு **மிஷனறி**யாக செல்வதற்கு முன்வந்தார்கள்.

**சீகன்பால்க் வாழ்க்கை வரலாறு**

இந்தியாவிற்கு வந்த முதல் புராட்டெஸ்டென்ட் **மிஷனரி** - இந்திய புராட்டெஸ்டண்ட் இயக்கத்தின் விடிவெள்ளி நட்சத்திரம் (The morning star of Indian Protestantinisam ) என்று அழைக்கப்படும். இவர் ஜெர்மனி நாட்டின் புல்ஸநிட்ஸ் (Pulsnitz) என்ற சிற்றூரில் 1682ம் ஆண்டு ஜுன் மாதம் 10ம் நாள் ஒரு செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். தனது 6 வயதில் தாயையும் 8 வயதில் தந்தையையும் இழந்தார்.

இவருடைய தாய் கேத்ரீன் மதிப்பதற்கு முன்பு தனது பிள்ளைகளை அழைத்து "என் அருமை பிள்ளைகளே! இந்த உலகத்தில் உங்களை தனியாக விட்டுச் செல்கின்றேன் என்ற கவலை இருப்பினும், உங்களுக்கு ஒரு பெரிய பொக்கி'த்தை வைத்துவிட்டு போகின்றேன். அதுதான் இந்த வேத புத்தகம். இந்த வேத புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் என் கண்ணீரால் நனைக்கின்றேன். இதை தேடி வாசியுங்கள். இதுவே உங்கள் ஆஸ்தி" - என்று கூறி ஜெர்மன் மொழி வேதாகமத்தை தன் பிள்ளைகளிடம் கொடுத்து விட்டு மரித்தார். உள்ளத்தை உருக்கும் இந்த வார்த்தைககள் 6வயது சீகன்பால்க்கை நிச்சயம் பாதித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சீகன்பால்க் தனது 16வது வயதில் இரட்சிக்கப்பட்டார். இந்த அனுபவத்திற்கு பின்பு கல்லூரி மாணவராக இருக்கும் சமயத்தில் சவால் நிறைந்த வார்த்தைகளை அவர் கேட்க நேர்ந்தது.

(தொடரும்)

# தடைகளை நீக்குங்கள்

**"நீங்கள் தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்"**

பிரியமானவர்களே நீங்கள் அநேக நாட்களாய் விணணப்பங்களை வைத்து ஜெபம் பண்ணியும் அவைகள் நிறைவேறவில்லையே என்று சோர்ந்து போனீர்களா? கவலை வேண்டாம். அவைகள் சந்திக்கப்படும் படியாய் சரியான தகுந்த முறையிலே நம்மை ஆயத்தப்படுத்தி விண்ணப்பம் பண்ணினால் நிச்சயம் பலன் கிடைக்கும். நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படாதபடி நம் வாழ்வில் அநேக தடைகள் காணப்படுகின்றன. அவற்றை அறிந்து அவைகளை களைந்து போட வேண்டும். ஒரு புத்தகத்தில் வாசித்த கதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு குளத்தில் நீர் நிரம்பியிருந்தது. ஆனால் அதைச் சூழ இருந்த வயல்களோ வாடிப்போயிருந்தன. அதன் காரணத்தை அறியும்படி ஒருவர் அதனைப் பார்வையிட்டார். குளத்தில் போதுமான அளவு தண்ணீர் இருக்கிறது. அங்கிருந்து வயல்களுக்குத் தண்ணீர் வர அழகிய பெரிய கால்வாயும் இருக்கிறது. ஆனாலும் தண்ணீர் வரவில்லை? காரணம் என்ன தெரியுமா? குளத்திலிமுருந்து கால்வாய்க்கு வரும் மதகுகளின் வாசல்களில் பழைய துணிகள், பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள், மரத்தின் இலை குழைகள், ஏனைய கழிவுப் பொருட்கள் போன்றன அடைத்துக் கொண்டிருந்தன. அவைகளை நீக்கிய பின் தண்ணீர் வேகமாக வயலுக்குப் பாய்ந்தது.

இதைப் போலத்தான் நம்முடைய வாழ்க்கையிலும் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ளாதபடி அநேக தடைகள் உள்ளன. ஜெபத்திற்கு மிகப் பெரிய தடையாக யாக். 1:6,7 ன்படி சந்தேகம், கீழ்ப்படியாமை (உபா. 1:45) அக்கிரம சிந்தை (சங். 66:18) மன்னியாத சுபாவம் (மாற். 11:25) பாவங்களும் அக்கிரமங்களும் தடை (ஏசாய. 59:2,3) எனவே பிரியமானவர்களே இப்படியான தடைகளை நாம் களைந்துவிட்டு அல்லது நீக்கிவிட்டு ஜெபிப்போம். நிச்சயம் நாம் ஜெயம் பெறுவோம். உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதக் கால்வாய் அடைக்கப்பட்டிருப்பின் அந்த அடைப்பை எடுத்துப் போட்டு தேவனின் ஆசீர்வாத தண்ணீருக்குள் அனுதினமும் நீந்தி நீந்தி மூழ்கங்கள்.

**சகோ. விக்ரம் [தீத்து]**

சிறுவர் பகுதி

# முயன்று பாருங்கள்

கட்டங்களைப் பூர்த்தி செய்க.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | | | | | | ■ | (2) | | (3) |
| | ■ | (4) | | | | ■ | | ■ | |
| | (5) | ■ | ■ | ■ | | | | (6) | |
| | | (7) | ■ | | (8) | | ■ | | ■ |
| ■ | | | (9) | | ■ | | ■ | | (10) |
| | | (11) | | (12) | | (13) | ■ | | |
| | | (14) | | | | ■ | ■ | ■ | |
| (15) | | ■ | ■ | (16) | (17) | | | | ■ |
| ■ | ■ | | (18) | | | | | ■ | ■ |
| (19) | | (20) | | | | | | ■ | ■ |

*மேலிருந்து கீழாக*

1. பேழை எந்த மலையின் மீது தங்கியது?
2. அதிசயமான காரியங்களை இன்று கண்டோம். "என்று வாசிப்பதெங்கே"
3. நோவா முதலில் எந்தப் பறவையை வெளியில் விட்டார்.
5. இரத்த நிலத்தை இப்படியாக அழைப்பர்.
6. கடவுள் எந்த மரத்தினால் பேழையைச் செய்யும்படி நோவாவிடம் கூறினார்?
7. ஜலப்பிரளயம் உண்டானபோது நோவாவிற்கு எத்தனை வயது?
9. ஒர்பாளின் மாமியார் பெயர்?
10. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கடைசி தீர்க்கதரிசி.
11. மூன்று இலக்கத்தைக் கொண்டு ஆக்கக்கூடிய ஆகக்குறைந்த பெறுமதி.

*இடமிருந்து வலமாக*

1. இயேசுவால் சபிக்கப்பட்ட மரம்.
2. "இன்று கிறிஸ்து என்னும் இரட்சகர் பிறந்திருக்கிறார்". என்று வாசிப்பதெங்கே.
4. எத்தனை நாட்கள் மழை பெய்தது.
12. பூச்சி இனங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
17. நோவாவிடம் கடவுள் செயய சொன்ன கப்பலின் உயரம் .
18. கற்றல் உபகரணங்களில் ஒன்று.
19. இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீஷர்களில் ஒருவன் (குழம்பியுள்ளது)

*கீழிருந்து மேலாக*

8. நோவாவிற்கு கடவுள் செய்ய சொன்ன பேழையின் அகலம் (குழம்பியுள்ளது).
17. ஆழ்கடலில் எடுப்பது.
20. 7000 ஆடுகள், 3000 ஒட்டகங்கள், 500 ஏர்மாடுகள், 500 கழுதை உடையவனாக இருந்தவன்.

*வலமிருந்து இடமாக*

14. ஒருவர் அறியாமல் செய்வதை இப்படி அழைப்பர் (குழம்பியுள்ளது)
18. ஒலிவமர இலையை கொண்டு வந்த பறவை.

*இதனைப் பூர்த்தி செய்க*

VOICE OF CALVARY,
No: 89,
BROWN ROAD,
KOKUVIL EAST,
KOKUVIL.

## அற்புத வேளையிலே

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

நான் என்னுடைய வாழ்வில் கல்வியிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கிய போதும் மெய்யான தேவனை அறியாது உயிருள்ள ஒரு மனிதனை தெய்வமாக பதினெட்டு ஆண்டுகள் வணங்கி வந்தேன். இருளில் வாழ்ந்து வந்த என்னை தேவனாகிய கிறிஸ்து இயேசு சந்தித்து பாவ வழிபாடுகளை மாற்றி இன்று மெய்யான தேவனை அறியும்படி உதவி செய்தார்.

ஆமென்.

*டானியேல்* ரகுநாதன்.

## அமைதியும் ஆபத்தே,

மிகவும் துயரமான சம்பவங்கள் நடக்கும் போது வாய் விட்டு அழுவதும், புலம்புவதும், பிறரிடம் பேசி எண்ணங்களின் சுமையைக் குறைத்துக் கொளவதும் நல்லது. மனதுக்குள்ளேயே அதை அமைதியாக அடக்கி வைத்துக் கொள்வதால் இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, போன்ற நோய்கள் உண்டாகின்றன. தற்காலிக அதிர்சிசயினால் நீரிழிவு நோய் ஏற்படும் ஆபத்து உண்டு.

**மகன்:**

**அப்பா அப்பா நான் எல்லா விளையாட்டிலும் பங்குபற்றி நிறையக் கப் எடுத்து வைத்திருக்கிறேன். இதையெல்லாம் வைத்து அதில் ஒரு கடை போடலாமா?**

**அப்பா:**

**நல்லது மகனே உன்னுடைய றிப்போட்டிலை உள்ள முட்டைகளையும் சோத்து பெரிய கடையாய்ப் போடலாம்.**

# சிறுவரின் பணியில் கர்த்தரின் கரம்

கல்வாரி அம்புகளில் சிறுவர் ஊழியமானது இயக்குனர் சாந்தி மத்தியூஸ் அவர்கள் தலைமையின் கீழ் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. சிறுவர் பணியின் போதகரான P. S. ஜெனோ செல்வராஜா அவர்கள் சேவையாற்றி வருகிறார். 2007ஆம் ஆண்டு இச் சிறுவர் பணியானது பெரும் வளர்ச்சியைத் தந்துள்ளது. 39 பணிக்களங்களில் இவ் ஊழியமானது 2409 பிள்ளைகளைக் கொண்டுள்ளது. 105 ஆசிரியர்கள் இப் பணிக்களங்களில் தேவ பணியை செய்து வருகின்றார்கள். 2004 ஆம் ஆண்டு இச் சிறுவர் ஊழியத்திற்கு எமது தலைமைப் போதகர் லெஸ்லி மத்தியூஸ் அவர்களால் "கல்வாரி அம்புகள்" என்ற பெயரால் விசேடமாக அழைக்கப்பட்டு பெயர் சூட்டப்பட்டது. எமது சிறுவர் பணியின் நோக்கமானது பிள்ளைகளுக்கு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொடுப்பதும் வறுமையில் வாடும் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதும் எதிர்காலத்தில் தேவனுக்காக தேவ பணிபுரியும் சிறந்த தலைவர்களை உருவாக்குவதுமே.

இப்பணியானது வளர்ச்சியடைந்து கொண்டு வரும் இவ் வேளையில் பலவிதமான ஏக்கங்கள், தாக்கங்கள், இழப்புகள், மத்தியிலும் வறுமையில் வாடும் அநேக சிறுவர்களும் எம் பணிக்களத்தில் உண்டு. அதுமட்டுமல்ல இவ் ஊழியத்தை விரிவுபடுத்த பலவிதமான பொருளாதார தேவைகளும் எமக்கு உண்டு. ஆகவே அன்புள்ளங்களே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் இச் சிறுவர் பணியை தாங்க வேண்டுமென்று ஏவுவாரானால் நீங்களும் இச்சிறுவர் பணிக்கு தாராளமாக உதவலாம். தேவன் தாமே புதிய ஆண்டில் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இறைபணியில்

**சகோதரி பா. மிலானி**

# இன்றும் ஜீவிக்கும் இயேசுவின் அற்புத சாட்சிகள்

**கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதாக**

கடந்த 20 வருட காலமாக பிசாசின் பிடியில் சிக்கி புத்தி சுயாதீனமானவனாக வேதனையோடு தான் செய்வது என்ன பேசுவது என்ன என்று அறியாதவளாக வேதனையோடு வாழ்ந்து வந்தாள். பலவிதமான வைத்தியங்கள் செய்தும் பலனளிக்கவில்லை. 1997ம் ஆண்டின் கடைசிப் பகுதியில் தேவாலயத்திற்கு வர ஆரம்பித்தாள். 2007 நவம்பர் மாதத்திலிருந்து தேவன் சுகத்தைக் கொடுத்திருக்கின்றார் 20 வருட மனநோய் அவளை விட்டு நீங்கியது. இப்போது சுகத்தோடு வாழ்கிறாள். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறாள். தேவன் நல்லவர். - ஆமென்.

பிரியமாவர்களே!

இந்த நூலை வாசிக்கும் நீங்கள் ஒரு வேளை கைவிடப்பட்ட வேதனையான சூழ் நிலையில் இருக்கக் கூடும். இந்த உலகில் என் துயரங்களை யாராலும் புரிந்து கொள்ளவே முடியாது என்கிறீர்களா? ஆனால் உங்களை புரிந்து கொள்ளவும், உங்களை நேசிக்கவும் ஒருவர் உண்டு அந்தக் கடவுள். உங்களைப் பார்த்து சொல்கிற காரியம் ""என்னை நோக்கி பாருங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்""

பிரியமாவர்களே! இரட்சிப்பின் ஒரே வாசல், ஒரே வழி இரட்சப்பினை இரத்தம் சிந்தி நிருபித்த ஒரே தேவன் கர்த்தராகிய இயேசு மட்டும் தான். உங்கள் கண்ணீருக்கு ஒரு முடிவை அளிக்கவும் நித்திய வாழ்க்கைக்குள் உங்களை அழைத்து செல்லவும் கரம் நீட்டும் கருணை தேவனுக்கு நீங்கள் ஏன் உங்கள் வாழ்க்கையை ஒரு முறை கொடுக்கக் கூடாது? நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் உங்கள் பாவங்களை இயேசுவுக்கு முன்பாக முழு உள்ளத்தோடு அறிக்கை செய்யுங்கள். பாவங்களை விட்டுவிட தீர்மானியுங்கள். தேவனின் கிருபை உங்களைத் தாங்கட்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. - ஆமென்.

உங்கள் ஜெப தேவைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

நிறம் தீட்டி மகிழுங்கள்



நிறம் தீட்டி அனுப்பி வையுங்கள்

முகவரி Voice of Calvary.
No. 24, Brown Road,
Kokuvil.



''பூ ஒன்று பூத்தது'' நத்தார் நிகழ்வில் கொக்குவில் சிறுவர்கள்.




''பூ ஒன்று பூத்தது'' நத்தார் நிகழ்வில் சங்கானை சிறுவர்கள்.




ஐக்கிய ஆராதனையில் தலைமைப் போதகருக்கு அறுபதாவது அகவையின் வாலிபர்களின் வாழ்த்துப்பா



''பூ ஒன்று பூத்தது'' நத்தார் நிகழ்வில் சிறுவர்கள்.



அறுபதாவது அகவையைக் காணும்
தலைமைப் போதகருக்கு வாலிபர்களின் வாழ்த்துக்கள்




கொக்குவில் ஓய்வுநாள் பாடசாலை மழலைகள்
தலைமைப் போதகரின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் காட்சி.

கல்வாரித் தொனி வாசகர்கள்
அனைவருக்கும்
கிறிஸ்து நிறைந்த
நத்தார் புதுவருட
நல் வாழ்த்துக்கள்

- கல்வாரிக் குடும்பம் -

# MERRY CHRISTMAS

கல்வாரி தொனி
கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்
இல: 89, பிறவுண் வீதி,
கொக்குவில்.
இலங்கை.
தொலைபேசி: 021 222 2930
மின் அஞ்சல்: calvaryfgc@gmail.Com.

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ்,
கே. கே. எஸ். வீதி, பூநாறிமரத்தடி, யாழ்ப்பாணம்.